# Holland Bloorview
# ரிமைகள் மற்றும் பொறுப்புகள்

Holland Bloorview Kids Rehabilitation Hospital ஆனது சமத்துவம், பன்முகத்தன்மை, உள்ளடக்கல் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றுக்கும், வாடிக்கையாளர்கள், குடும்பங்கள், ஊழியர்கள், தன்னார்வலர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் மரியாதைக்குரிய இடம் வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது.

Holland Bloorview உரிமைகளும் பொறுப்புகளும் எங்கள் மதிப்புகளை எடுத்துக்காட்டுகிறது, மற்றும் நேரிலோ, இணையம் வாயிலாகவோ அல்லது எழுத்து மூலமோ நாங்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் மற்றும் தொடர்புகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறோம் என வழிகாட்டுகிறது. அச்சுறுத்துகின்ற, சீர்குலைக்கின்ற, அல்லது மற்றவர்களின் பாதுகாப்புக்கும் நலவாழ்வுக்கும் மற்ற வழிகளில் அச்சுறுத்தல் விளைவிக்கின்ற நடத்தை பொறுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

| மதிப்பு | அது என்ன? | பரஸ்பரம் மற்றவருக்கான எங்கள் பொறுப்பு |
|---|---|---|
| கண்ணியம் மற்றும் மரியாதை | ஒவ்வொரு நபருக்கும் மதிப்பளித்தல் | அச்சுறுத்தல் இல்லாத, ஆதரவான, புரிந்துகொள்ளக்கூடிய மற்றும் அடக்கமான வழிகளில் நாங்கள் தொடர்புகொள்கிறோம். |
| பரிவு | கருணை காட்டுதல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல் | அனைவருக்கும் மரியாதையளித்து அவர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் ஒரு பாதுகாப்பான, வரவேற்கத்தக்க சூழ்நிலையை நாங்கள் உருவாக்குகிறோம். |
| தகவல் பகிர்வு | மக்களுக்கு / நிறுவனங்களுக்கு இடையே சுயவிருப்பத்துடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்ளுதல் | அர்த்தமுள்ள, எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய தகவல்களை உரிய நேரத்தில், ஒவ்வொருவரின் தனியுரிமைக்கும் மதிப்பளிக்கின்ற வழியில் உதவிகரமான தகவல்களை நாங்கள் பகிர்ந்துகொள்கிறோம். |
| கூட்டாண்மை | சாத்தியமுள்ள ஆகச் சிறந்த முடிவுகளை உருவாக்க ஒன்றிணைந்து பணியாற்றுதல் | நாங்கள் நமது வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்கிறோம், திறந்த மனதுடன் செவிமடுத்துக் கேட்கிறோம், எங்கள் யோசனைகளை, வல்லமைகளை, நம்பிக்கைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம். |

**உங்கள் கருத்துகளை அல்லது பிரச்சனைகளைப் பகிர்ந்துகொள்ள, தயவுசெய்து கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருந்தக்கூடிய தொடர்பு விவரங்கள் மூலம் தொடர்புகொள்ளவும்** (உதாரணமாக, நீங்கள் ஒரு வாடிக்கையாளராக அல்லது குடும்ப உறுப்பினராக இருந்தால், தொடர்புகொள்க 416-425-6220 தொடர்பகம். 6084 அல்லது feedback@hollandbloorview.ca).

**வாடிக்கையாளர்கள் / குடும்பங்கள்:** 416-425-6220 தொடர்பகம் 6084 அல்லது feedback@hollandbloorview.ca
**பணியாளர்கள்:** 416-422-7048 அல்லது humanresources@hollandbloorview.ca
**ஆராய்ச்சி பங்கேற்பாளர்கள்:** researchethicsboard@hollandbloorview.ca
**மாணவர்கள்:** 416-425-6220 தொடர்பகம் 3645 அல்லது kgalley@hollandbloorview.ca
**தன்னார்வலர்கள்:** 416-425-6220 தொடர்பகம் 7032 அல்லதுvolunteers@hollandbloorview.ca
**பார்வையாளர்கள்:** 416-400-8876 அல்லது info@hollandbloorview.ca



Holland Bloorview
Kids Rehabilitation Hospital